**சார்பு நீதிமன்றம், செஞ்சி**

**அ.வ.எண்.109/16** **நாள்.18.12.2019**

2019-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18-ம் நாள் வாதி தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பன்னீர் செல்வம் | தொழில் | |
| த.பெ/க.பெ. | தாமோதரன் | சாதி | |
| கிராமம் | | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | |

**குறுக்கு விசாரணை**

நான் அரசு போக்குவரத்து நடத்துனராக பணியாற்றி வருகிறேன். சொத்தை என் அப்பாவிடம் இருந்து ஏமாற்றி வாங்கிவிட்டதற்காக வழக்கு போட்டுள்ளேன். என் அப்பாவிற்கு நாங்கள் 6 மகன்கள். 1 மகள். என் தாயாரின் அன்னபூரணி. என் அப்பாவிற்கு 2 மனைவி. 1 முதல் மனைவியின் பெயர் ஆண்டாள் அம்மாள். ஆண்டாள் அம்மாளுக்கு 2 மகன். 1 மகள் உள்ளார்கள். அன்பு செழியன், பஞ்சாயிரம் மற்றும் உலகநாயகி ஆவார்கள். அன்பு செழியன் காலமாகிவிட்டார். என்னுடன் உடன் பிறந்தவர்கள் கருணாகரன், பகிரதன், பரந்தாமன். என் குடும்ப பொறுப்பு முழுவதையும் என் அப்பா தான் பார்த்து வந்தார் என்றால் சரிதான். என் அப்பாவுடன் உடன் பிறந்தவர்கள் அப்பா மற்றும் அவரது ஒரே சகோதரர் தான். என் அப்பாவும் சித்தாப்பாவும் பாகம் பிரித்து கொண்டார்களா என்றால் பிரித்து கொண்டார்கள். அதில் யார் யாருக்கு எவ்வளவு சொத்து வந்தது என்பதை நான் நீதிமன்றத்தில் சொல்லவில்லை. சொத்து, அப்பா சொத்து தான் என்பதற்கு எதுவும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பா இறந்து சுமார் 7 அல்லது 8 வருடம் இருக்கும். அப்பா இறக்கும் வரை அவர் தான் குடும்பத்தை பார்த்து வந்தார் என்றால் சரிதான். நாங்கள் 6 குமாரர்கள் கடன் வரவு செலவு பார்க்கமாட்டோம், என் தந்தை தான் பார்த்து வந்தார் என்றால் சரிதான். எனக்கு 1992ல் திருமணம் ஆனது. எங்களது கல்வி மற்றும் திருமண செலவை என் அப்பா தான் பார்த்தார் என்றால்

சரியல்ல. கல்வி செலவை என் அப்பா பார்த்தார். என் அப்பா 2 வருடம் மனநிலை சரியில்லாமல் காணாமல் போய்விட்டார். இறப்பதற்கு 2 வருடங்களுக்கு முன்பு தான் காணாமல் போய் விட்டார். என் பெரியம்மா பிள்ளைகளுக்கும் என் உடன் பிறந்தவர்களுக்கும் என் அப்பா தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். பெரியம்மா இறந்து விட்டார். அம்மா உயிருடன் தான் இருக்கிறார். பிரதிவாதிகள் என் ஊர்க்காரர்கள். என் உறவினர் அல்ல. பிரதிவாதிகளுக்கும் எங்களுக்கும் சொத்து பிரச்சனை தவிர வேறு எந்த பிரச்சனையும் கிடையாது.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி பிரதிவாதி தரப்பிற்கு ஆவணங்களின் நகல் வழங்க கேட்டு ஒத்திவைக்கப்படுகிறது.)**